தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 2-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு

அந்தமான் அருகே வங்கக் கடலில் புயல் உருவாகியுள்ளதைத் தொடர்ந்து, நாகை துறைமுக அலுவலகத்தில் 2-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு புதன்கிழமை பிற்பகல் ஏற்றப்பட்டது. அந்தமானுக்கு அருகே வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, நாகை துறைமுக அலுவலகத்தில் 1-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஏற்றப்பட்டது. அந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை, புயல் சின்னமாக உருவானதை யடுத்து, புயல் உருவாகியுள்ளது என்பதை அறிவிக்கும் தூர எச்சரிக்கையாக நாகை துறைமுக அலுவலகத்தில் 2-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு புதன்கிழமை பிற்பகல் ஏற்றப்பட்டது.

### அவிநாசியில் ரூ. 3.27 லட்சத்திற்கு பருத்தி ஏலம்

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பருத்தி வரத்து அதிகரித்து ரூ. 3.27 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. ஏ.சி.எம்.எஸ். மையத்தில் நடைபெற்ற ஏலத்திற்கு, 242 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. குவிண்டால் ஒன்றுக்கு ஆர்.சி.எச். ரகப் பருத்தி ரூ. 3,600 முதல் ரூ. 4,225 வரையிலும், டி.சி.எச். ரகப்பருத்தி ரூ. 4,200 முதல் ரூ. 4,250 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2,600 முதல் ரூ. 3,100 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 3.27 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. இதில், குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம், திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தருமபுரி, பொம்மிடிப்பூண்டி,

அந்தியூர், குண்டடம், கிணத்துக்கடவு, அன்னூர், கோபி, நீச்சாம்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து 56 பருத்தி விவசாயிகளும், 5 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## குன்னூரில் இடியுடன் பலத்த மழை

குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் புதன்கிழமை மாலை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. புதன்கிழமை மாலை தொடர்ந்து கனமழை பெய்ததால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர். தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருவதால் நீர்த்தேக்கப் பகுதிகளில் கணிசமான அளவு நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## செங்கத்தில் கன மழை

திருவண்ணாமலை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு அதிகபட்சமாக, செங்கத்தில் 52.20 மில்லி மீட்டர் மழை பெய்தது. திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் செவ்வாய்க் கிழமை இரவு முதல் புதன்கிழமை காலை வரை மழை பெய்தது. இதில், மாவட்டத்திலேயே அதிகபட்சமாக செங்கத்தில் 52.20 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இதுதவிர, ஆரணியில் 10.80, செய்யாறில் 1.50, சாத்தனூர் அணை பகுதியில் 43.20, போளூரில் 11.40, திருவண்ணா மலையில் 2.80 மில்லி மீட்டர் மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 121.90 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் விவசாயிகள், பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## டெல்டா பகுதிகளில் விரைவில் நெல்கொள்முதல் நிலையங்கள்

கடலூர் மாவட்டத்தில் உள்ள டெல்டா பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் விரைவில் திறக்கப்படவுள்ளன. கடலூர் மாவட்டத்தில் நவரை, சம்பா, சொர்ணாவாரி, குறுவை ஆகிய 4 விதமான நெல் சாகுபடி

பருவங்கள் உள்ளன. இதில், சம்பா பருவத்தில் தான் அதிக பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக சொர்ணாவாரி மற்றும் குறுவை பருவங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு காவிரி டெல்டா பகுதிகளைத் தவிர்த்த இதர பகுதிகளில் சுமார் 17 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இதேபோல, கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் காவிரி டெல்டா பகுதிகளில் 10 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப் பட்டது. குறுவை சாகுபடி நெல் இம்மாதம் முதல் அறுவடைக்கு வரும் என்பதால் நெல் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை நுகர்பொருள் வாணிபக்கழகம் செய்து வருகிறது. இதுகுறித்து, நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் தெரிவிக்கையில், தமிழகத்தில் 2013-2014ஆம் ஆண்டுக்கான கொள்முதல் பருவம் கடந்த மாதம் 15ஆம் தேதியுடன் நிறைவடைந்து விட்டது. இக்கால கட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் 39,169 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் குறைவு தான். 2014-2015ஆம் ஆண்டுக்கான கொள்முதல் பருவம் கடந்த 1-ஆம் தேதி முதல் தொடங்கியுள்ளது. இப்பருவத்தில் சன்னரகம் நெல் கொள்முதல் விலை கிலோவுக்கு 14 ரூபாய் 70 காசுகளாகவும், சாதாரண நெல் கொள்முதல் விலை கிலோவுக்கு 14 ரூபாய் 10 காசுகளாகவும் நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி நெல்லை கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம். விவசாயிகள் கோரும் இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்றனர்.

## அரியலூரில் பலத்த மழை: மக்கள் மகிழ்ச்சி

அரியலூரில் புதன்கிழமை பெய்த பலத்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அரியலூர் மாவட்டத்தில் கோடை காலம் போல வெயில் மக்களை வாட்டி வதைத்து வந்தது. இந்த நிலையில்,

செவ்வாய்க்கிழமை இரவு இடி, மின்னலுடன் மழை வருவது போன்ற சூழல் நிலவியது. ஆனால், தூறலுடன் மழை நின்றுவிட்டது. இதனால் மக்கள் ஏமாற்றமடைந்தனர். எனினும், புதன்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு பலத்த காற்றுடன் தொடங்கிய மழை சுமார் 1 மணி நேரம் கொட்டியது. சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல ஓடியதால், வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. இதனால், மக்கள் மகிழ்ச்சி யடைந்தனர். இந்த மழை அரியலூர் மாவட்டத்தில் சோளம், கம்பு, துவரை, வரகு, பயறு வகைகள், காய்கறிப் பயிர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## <u>விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி</u>

புதுக்கோட்டை அருகே மெய்வழிச்சாலை கோயில்காடு கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்புத் திட்டம் மூலம் காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. புதுக்கோட்டை கிரீன்கேர் பவுண்டேஷனுடன் இணைந்து நடத்தப்பட்ட களப்பயிற்சிக்கு குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் வ. சாந்தி தலைமை வகித்து, காளான் வளர்ப்பு பற்றிய தொழில்நுட்பக் கையேடு, குறுந்தகட்டை வெளியிட்டார். கிரீன்கேர் பவுண்டேஷன் நிறுவனர் வே. ரவீந்திரன் - காளாளின் இன்றைய தேவை, முக்கியத்துவம், மருத்துவ குணங்கள் குறித்தும், வம்பன் வேளாண் அறிவியல் மைய பயிர் நோய் இயல் உதவி பேராசிரியர் சு. மதியழகன் - காளான் வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்தும், மனையியல் உதவி பேராசிரியர் க. கீதா - மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல், காளானின் சத்துக்கள் குறித்தும், தோட்டக்கலை உதவி இயக்குநர் அருணாச்சலம் - அரசு செயல்படுத்தி வரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்தனர். பயிற்சியின்போது, காளானின் பல்வேறு வகைகள், அதன் வளர்ப்பு முறைகள் மற்றும் மதிப்புக்கூட்டிய காளான் பொருள்கள் பார்வைக்கு

வைக்கப்பட்டன. மேலும், உதவி வேளாண் அலுவலர் சேவியர், கிரீன்கேர் பவுண்டேஷன் அலுவலர்கள் அர்ச்சுனன், ரெங்கசாமி, ராஜ்குமார், சாலை வல்லான் ஆகியோர் பங்கேற்று பல வகையான பயிற்சியை அளித்தனர்.

**<u>நீடாமங்கலம் வேளாண் கோட்டத்தில் தாளடி நடவுப் பணிகள் தீவிரம்</u>**

நீடாமங்கலம் வேளாண் கோட்டத்தில் தாளடி நடவுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து நீடாமங்கலம் வேளாண் கோட்ட உதவி இயக்குநர் ந.இளஞ்செழியன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: நீடாமங்கலம் வேளாண் கோட்டத்தில் தாளடி நடவுப் பணி தீவிரமடைந்துள்ளது. நேரடி நெல் விதைப்பு 1,686 ஹெக்டேரில் விதைப்பு செய்யப்பட்டு களையெடுக்கப்பட்டு மேலுரம் இடப்பட்டு வருகிறது. சம்பா நடவு பணி 8,400 ஹெக்டேரிலும், தாளடி நடவு 9,074 ஹெக்டேரிலும் நடவு செய்யப்பட்டு வருகிறது. தாளடி நடவு செய்யும்போது இளம் நாற்று நடவு செய்ய முன்வர வேண்டும். திருந்திய நெல் சாகுபடி நாற்றுகளை 14 நாட்களிலும், சாதாரண நடவு முறையில் 25 நாட்களுக்குள்ளும் நடவு செயய் வேண்டும். நடவு செய்யும்போது சேற்றில் மேலாக ஒற்றை நாற்றைக் கொண்டு நடவு செய்ய வேண்டும். நாற்றுகளை அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா நுண்ணுயிர் உரங்களை நாற்றங்காலில் கரைத்து வேரில் நனையும்படி நடவு மேற்கொண்டால் அதிக தூர்கட்டி அதிக விளைச்சல் கொடுக்கும். நடவு பணிகளை காலதாமதமின்றி மேற்கொள்ளவும் விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம், தனியார் உர நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அனைத்து இடுபொருட் களையும் காலதாமதமின்றி பயன்படுத்தி அதிக தூர் கட்ட வைத்து, அதிக கதிர்களை உருவாக்கி சம்பா மற்றும் தாளடியில் அதிக மகசூலை பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

## <u>வேதாரண்யம் பகுதியில் இடியுடன் மழை</u>

நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு வேதாரண்யம் பகுதியின் கடலோரக் கிராமங்களில் செவ்வாய்க்கிழமை இரவு திடீரென இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. வேதாரண்யத்தில் புதன்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி 35.8 மி.மீட்டரும், தலைஞாயிறு 1.8 மி.மீ மழை பதிவானது. இந்த மழை ஓரளவுக்கு ஆறுதலை தருவதோடு, விவசாயப் பணிகளுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## <u>திருத்தணியில் ஒரு மணிநேரம் பலத்த மழை</u>

திருத்தணி : திருத்தணியில், நேற்று பகலில் ஒரு மணிநேரம் பலத்த மழை பெய்துள்ளதால், வடகிழக்கு பருவமழை துவங்கி விட்டது. இந்த மழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். திருத்தணி ஒன்றியத்தில் உள்ள, 27 ஊராட்சிகளிலும் வசிப்பவர்களில், 95 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பியே வாழ்கின்றனர். இரு ஆண்டுகளாக பருவமழை, திருத்தணி பகுதியில் பெய்யாமல் ஏமாற்றி வருகிறது. இதனால், பெரும்பாலான விவசாயிகள், கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டதால், பயிரிடாமல், மழைக்காக காத்திருக்கின்றனர். தென்மேற்கு பருவமழை பெய்யாததால், விவசாயிகள் சோகத்தில் இருந்தனர்.தற்போது, வடகிழக்கு பருவமழை

காலம் ஆரம்பித்துள்ள நிலையில், நேற்று முன்தினம் இரவு, மூன்று மணிநேரம் மழை பெய்தது. நேற்று மதியம், திருத்தணி நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் ஒரு மணிநேரம் பலத்த மழை பெய்தது. இதனால், கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். விவசாய நிலங்களில் பயிரிடலாம் என, விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்கின்றனர்.அதே போல், திருத்தணி நகர மக்களும் பருவமழை நீடித்தால், குடிநீர் தட்டுப்பாடு நீங்கும் எனவும் எதிர்பார்க்கின்றனர்.

**<u>கன மழையால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு</u>**

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விடிய,விடிய பெய்த கன மழையால் மணி நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சங்கராபுரம் பகுதியில் கடந்த இரண்டாண்டாக பருவ மழை பொய்த்தது. இதனால் ஏரி,குளங்கள் வறண்டன. கடும் வறட்சி காரணமாக கிணறு களில் நீர்மட்டம் குறைந்தது. குடிநீர் தேடி மக்கள் அலை யும் நிலை ஏற்பட்டது. நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு தொடங்கிய மழை அதிகாலை 4 மணி வரை கொட்டித் தீர்த்தது. கல்வராயன் மலையிலும் கனமழை பெய்தது. இதனால் நேற்று காலை சங்கராபுரம் மணி நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சங்கராபுரம் பகுதி மக்கள் ஆர்வத்துடன் கண்டு களித்தனர்.

**<u>மானாவாரி உளுந்து விதைப்பு பணி துவக்கம்</u>**

தியாகதுருகம்: தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் மானாவாரி உளுந்து விதைப்பு பணியில் விவசாயிகள் தீவி ரமாக ஈடுபட்டுள்ளனர். தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் ஆண்டுதோறும் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி உளுந்து சாகுபடி செய்கின்றனர். கடந்த ஆண்டு உளுந்து மகசூல் அதிகரித்ததால் பயிரிட்ட பலருக்கும் லாபம் கிடைத்தது. மானாவாரி கம்பு அறுவடையை தொடர்ந்து உளுந்து விதைப்பது வழக்கம். சில வாரங்களாக கம்பு அறுவடை செய்யும் பணிகளில்

விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர். தொடர்ந்து 2 ஆண்டாக கம்பு மகசூல் அதிகம் கிடைத்ததால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு தியாக துருகம், ரிஷிவந்தியம் பகுதியில் பரவலாக கனமழை பெய்தது. இதன் மூலம் கிடைத்த ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் உளுந்து விதைப்பு பணிகளை துவக்கியுள்ளனர். கனமழை, கடும் வெயிலை தாக்குபிடித்து பலன் தரும் உளுந்து பயிர் மூலம் இவ்வாண்டும் நல்ல மகசூல் பெறமுடியும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர்.

## விவசாய பணியில் அயல்நாட்டு மாணவர்கள்

மயிலம்: கொணமங்கலம் கிராமத்தில் ஜெர்மன், பிரான்ஸ் நாட்டின் மாணவர்கள் இயற்கை விவசாய பணிகளை தீவிரமாக செய்தனர். மயிலம் ஒன்றியத்திலுள்ள கொணமங்கலம் கிராமத்தில் சிருஷ்டி மாதிரி இயற்கை பண்ணையில் மா, சப்போட்டா, தென்னை, மற்றும் காய்கறி செடிகள் இயற்கை முறையில் சாகுபடிகள் செய்யப்படுகிறது.இங்கு ஜெர்மன் நாட்டை சேர்ந்த டேவிட், அனிக்கா, ஹாக், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த எல்லோடி உட்பட 12 மாணவர்கள் அனுபவ பயிற்சிக்காக தமிழகம் வந்துள்ளனர். இவர்கள் கொணமங்கலம் கிராமத்தில் சிருஷ்டி பண்ணை நிலத்தில் விவசாய பணிகளை மேற்கொண்டனர். சிருஷ்டி நிர்வாக இயக்குனர் கார்த்திகேயன், விவசாயிகள் மகேஷ், ஏழுமலை, கருணாகரன் <உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஆத்தூரில் 97.6 மி.மீ., மழை பதிவு

சேலம்: சேலம் மாவட்டம் ஆத்தூரில், நேற்று முன்தினம் அதிகப்பட்சமாக, 97.6 மி.மீ., மழை பதிவானது. சேலம் மாவட்டம் முழுவதும் கடந்த ஒரு வாரமாக, மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. சேலம் புறநகர் பகுதிகளில் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், சேலத்தில், 18.6 மி.மீ., ஏற்காட்டில் 27.4, வாழப்பாடியில், 38, ஆத்தூரில், 97.6, தம்மம்பட்டியில், 6.1,

கெங்கவல்லியில், 6.4, வீரகனூரில்,13.3, இடைப்பாடியில், 1, ஓமலூரில், 4 மி.மீ., மழை பதிவானது.

## <u>ரூ.5 லட்சம் செலவில் "சோலார்' மின் மோட்டார் 80% மானியத்தால் மானாவரி சாகுபடி அதிகரிப்பு</u>

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில், ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பில், சோலார் மின் மோட்டார் திட்டம், 80 சதவீத மானியத்தில் நடைமுறைப்படுத்தி உள்ளதால், விவசாயத்தில் மானாவரி சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. நாமக்கல் மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில், தகுதியான விவசாயிகளுக்கு, அரசின் சோலார் மின் மோட்டார் திட்டம் செயல்படுத்த, நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகள் செய்து தரப்படுகிறது. இத்திட்டத்தில், ஐந்து ஹெச்.பி., குதிரைத்திறன் கொண்ட நீர் மூழ்கி பம்பு, சோலார் பேனல், ஸ்டேண்ட், கன்வர்ட்டர், இன்வெர்ட் டர், பம்பு உள்ளிட்ட உபகரணம், ஐந்து லட்சம் மதிப்பில் வழங்கப்படும். தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், 50 சதவீதம், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி முகமையில், 30 சதவீதம், என, 80 சதவீத தொகை மானியமாக வழங்கப்படுகிறது. அதன்படி, திறந்தவெளி கிணற்றுக்கு, மூன்று லட்சத்து, 84 ஆயிரம் ரூபாய், ஆழ்துளை கிணற்றுக்கு, மூன்று லட்சத்து, 35 ஆயிரத்து 200 ரூபாய், மேற்பரப்பு நீர்த்தேக்க தொட்டிக்கு, மூன்று லட்சத்து 99 ஆயிரத்து 872 ரூபாய் என்ற விதத்தில், விவசாயிக்கு மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள, 20 சதவீத தொகையில், திறந்வெளி கிணற்றுக்கு, ஒரு லட்சத்து, 17 ஆயிரத்து 512 ரூபாய், ஆழ்துளை கிணற்றுக்கு, ஒரு லட்சத்து, 25 ஆயிரத்து 700 ரூபாய், மேற்பரப்பு நீர்த்தேக்க தொட்டிக்கு, ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 778 ரூபாய் என்ற விதத்தில், விவசாயிகள் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப் பட்ட நிறுவனத்திடம் தொகையை செலுத்த வேண்டும். ப.வேலூர் அடுத்த, கீழ்சாத்தம்பூர் பகுதியைச் சேர்ந்த விவசாயி அசோகன் என்பவர், அரசின்

மானிய விலையில், சோலார் மின்திட்டத்தை அமைத்து, சொட்டு நீர் மற்றும் சுழல்முறை நீர்பாய்ச்சல் முறையில், விவசாயம் செய்து வருகிறார். முன்னோடி விவசாயின் தோட்டத்தில் உள்ள சோலார் சிஸ்டத்தை, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி பார்வையிட்டு கூறியதாவது: நடப்பாண்டு, நாமக்கல் மாவட்டத்தில், 103 விவசாயிகளுக்கு திறந்தவெளி கிணற்றில் நீர் இறைக்கவும், 16 விவசாயிகளுக்கு ஆழ்துளை கிணற்றில் நீர் இரைக்கவும், ஏழு விவசாயிகளுக்கு தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் நீர் இரைக்கவும் பயனாளி தேர்வு செய்யப்பட்டு, சோலார் மின்மோட்டார் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தகுதியான விவசாயிகள், சோலார் மின் மோட்டார் மூலம் பயனடைய வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மலைப்பகுதி விவசாயிகள் நாற்றுகள் பெற அழைப்பு</u>

நாமக்கல்: "கொல்லிமலை பகுதி விவசாயிகள், சில்வர்ஓக், மிளகு, காஃபி, பலா, கொய்யா பதியன், மா ஒட்டு, எலுமிச்சை உள்ளிட்ட நாற்றுகளை நடவு செய்து பயனடைய வேண்டும்' என, தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) மணிவண்ணன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்ட தோட்டக்கலைத்துறை சார்பில், கொல்லிமலை அடுத்த செம்மேடு மற்றும் படசோலையில், தோட்டக்கலை பண்ணை செயல்படுகிறது. இதில், கொல்லைமலை மலைப்பகுதியில் பயிரிடத்தக்க சில்வர்ஓக், மிளகு, காபி, பலா உள்ளிட்ட நாற்றுகளும், சமவெளிப்பகுதியில் பயிரிடத்தக்க கொய்யா பதியன், மா ஒட்டு, எலுமிச்சை நாற்று ஆகியன இருப்பில் உள்ளது. எனவே, கொல்லிமலை பகுதி விவசாயிகள், தற்போதைய மழையை பயன்படுத்தி, மேற்கண்ட நாற்றுகளை நடவு செய்து பயனடைய வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மழையால் வெங்காயம் அறுவடை நிறுத்தம் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

ப.வேலூர்: தொடர் மழை காரணமாக, சின்ன வெங்காயம் அறுவடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், வெங்காயத்தின் விலை கிலோவுக்கு கணிசமாக உயர்ந்துள்ளது. இது பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. ப.வேலூர் அடுத்த பரமத்தி, கபிலர்மலை வட்டாரம், பரமத்தி, ஜேடர்பாளையம், கபிலர்மலை, பிலிக்கல்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 100 ஹெக்டர் அளவில், சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பாத்தி கட்டிய நிலத்தில், விதை வெங்காயம் நடவு செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டருக்கு, 250 முதல், 300 கிலோ விதை வெங்காயம் தேவைப்படுகிறது. அவ்வாறு நடவு செய்யப்பட்டபின், மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடவேண்டும். 90 நாள் பயிரான வெங்காயம், நல்ல விளைச்சல் கிடைத்தால், ஹெக்டருக்கு, ஐந்து முதல், ஆறு டன் வரை விளைச்சல் பெறலாம். தற்போது, ப.வேலூர் பகுதியில் சின்ன வெங்காயத்தின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. அதனால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது: சின்ன வெங்காயம், 90 நாள் பயிராகும். அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தை, வெயிலில் உலர்த்தி பின் பட்டறை அமைக்கப்படுகிறது. அத்தகைய வெங்காயத்தையே விற்பனை செய்ய முடியும். ஈர வெங்காயத்தை விற்பனை செய்ய முடியாது. மழை காலத்துக்கு முன்பே அறுவடை செய்து காயவைத்து, பட்டறை அமைக்கப்படுகிறது. அந்த வெங்காயத்தை பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது தொடர்ந்து மழை பெய்து வருவதால், வெங்காய அறுவடை நிறுத்தப்பட்டுள்ளது. அதனால், பட்டறையில் வைக்கப்பட்ட வெங்காயத்தை தற்போது விற்பனை செய்து வருகிறோம். ஒரு கிலோ வெங்காயம், 15 முதல், 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. மழை

காலம் என்பதால், அதன் விலையில், கிலோவுக்கு, ஐந்து ரூபாய் அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**நாட்டுக்கோழிவளர்ப்பு பயிற்சி**

பென்னாகரம்: தர்மபுரி மாவட்ட வனத்துறைக்கு உட்பட்ட, வனக்குழு உறுப்பினர்களுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி ஒகேனக்கல்லில் நடந்தது. தமிழ்நாடு கால்நடை பல்கலை பயிற்சி மைய தலைவர் செந்தில்வேல் மற்றும் சந்தோஷ்குமார் பயிற்சி அளித்தனர். நாட்டுக் கோழி வளர்ப்பு, சந்தை நிலவரம், பண்ணை அமைத்தல், நோய் தடுப்பு மற்றும் தீவனம் சேகரிப்பு குறித்து விளக்கி பேசினர். வனக்குழு தலைவர் வெங்கடாச்சலம், பெருமாள், மேகநாதன் உள்ளிட்ட வனக்குழு உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**இயற்கை சார்ந்த விவசாயத்தை மேம்படுத்துவது காலத்தின் கட்டாயம்**

குன்னூர் : "நீலகிரியில் கிராமங்களில் கூட ஓட்டல்கள் அதிகரித்து, வாழ்வியல் கலாசாரங்கள் மாறி வருவதை தடுக்க, இயற்கை சார்ந்த விவசாயத்தை மேம்படுத்த வேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது. குன்னூர் உபாசி அரங்கில் நடந்த ஆதிவாசி மக்கள் பங்களிப்புக்கான விவசாய திட்ட கூட்டத்தில் பங்கேற்ற தேயிலை வாரிய செயல் இயக்கு னர் அம்பலவாணன் கூறியதாவது: நீலகிரி மாவட்டத்தில் இயற்கையை பாதுகாக்கும் கருவாக ஆதிவாசி மக்கள் உள்ளனர். இங்கு 8000 பழங் குடியின குடும்பங்கள் உள்ளன. தனித்தன்மை வாய்ந்த பழைய கலாசாரம் மற்றும் வாழ்வியல் நடைமுறைகள் தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி யால் மாறி வருகிறது. கிராமங்களில் கூட ஓட்டல்கள், கட்டடங்கள் அதிகரித்து வருவதால், வாழ்வியல் கலாசாரங்களும் மாறுகின்றன. கலாசாரத்துடன் கூடிய வாழ்வாதாரத்தை விவசாயத்தால் மட்டுமே மேம்படுத்த முடியும்.சுற்றுச்சூழலை பாதுகாக்க இயற்கை சார்ந்த விவசாய தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். இதற்காக ஆடு,

மாடுகளை வளர்க்கவும், சம்மந்தப்பட்ட துறையினரை ஆதிவாசி மக்கள் அணுகலாம். இவ்வாறு, அம்பலவாணன் பேசினார்.

## 93 ஆயிரம் ரூபாய்க்கு வாழைத்தார் ஏலம்

திருச்சி: திருச்சியை அடுத்த, திருச்செந்துறை ஒருங்கிணைந்த வணிக வளாகத்தில், 93 ஆயிரம் ரூபாய்க்கும், வாழைத்தார்கள் ஏலம் விடப்பட்டது. திருச்சி அருகே உள்ள திருச்செந்துறை வாழை வளாகத்தில் நேற்று நடந்த ஏலத்துக்கு, கரூர், குளித்தலை, தஞ்சை, ஒரத்தநாடு, ஈச்சாங்கோட்டை, திருச்சி, அந்தநல்லூர், ஜீயபுரம் ஆகிய இடங்களில் இருந்து, ஒன்பது விவசாயிகள், 532 வாழைத்தார்களை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி உள்ளிட்ட வாழைத்தார்கள் அதிகளவில் இருந்தது. ரஸ்தாளி தார், 325 ரூபாய்க்கும், பூவன், 310 ரூபாய்க்கும், மொந்தன் வாயை, 225 ரூபாய்க்கும் விற்றது. 10 வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். மொத்தம், 93 ஆயிரத்து, 632 ரூபாய்க்கு ஏலம் நடந்தது.

## அணையில் நீர் அதிகரிப்பு நீரில் மூழ்கிய தரைப்பாலம்

ஓசூர்: ஓசூர் அருகே உள்ள, கெலவரப்பள்ளி அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், வினாடிக்கு 1,000 கன அடி தண்ணீர், தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டு வருகிறது. ஓசூர் அருகே உள்ள, கெலவரப்பள்ளி அணையின் நீர்பிடிப்பு பகுதியான, பெங்களூரு வில் உள்ள நந்திஹில்ஸ் பகுதியில், சில நாட்களாக கனமழை பெய்து வருவதால், நேற்று காலை முதல், அணைக்கு, வினாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் வந்தது. இதனால், அணையின் மொத்த கொள்ளளவான, 44.28 அடியில், 42.08 அடி வரை தண்ணீர் இருந்தது. இதையடுத்து, கெலவரப்பள்ளி இடது, வலது மற்றும் தென்பெண்ணை ஆற்றில் மொத்தம், 1,030 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கெலவரப்பள்ளி அணையில் இருந்து, தற்போது, 1,000 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், தரைப்பாலத்தை மூழ்கடிக்கும் அளவுக்கு தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. எனவே, பாத்தக்கோட்டா சுற்று வட்டார பகுதிகளில் உள்ள பொதுமக்கள், அப்பகுதியில் உள்ள தரைமட்ட பாலத்தை கடக்கும் போது, எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**<u>எள் செடிகளில் பச்சை பூச்சி தாக்குதல்</u>**

லாலாபேட்டை: கிருஷ்ணராயபுரம் யூனியன் உட்பட்ட பகுதிகளில், மானாவரி பயிராக எள் சாகுபடி செய்துள்ளனர். இதில், பச்சைப் பூச்சித் தாக்குதல் அதிகம் உள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் யூனியன் உட்பட்ட பகுதிகளான பஞ்சப்பட்டி, சிவாயம், கோடங்கிப்பட்டி, சரவணபுரம், பாம்பன்பட்டி, புனவாசிப்பட்டி, மகிளிப்பட்டி, அந்தரப்பட்டி, வேங்காம்பட்டி ஆகிய பகுதிகளில், 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் மானாவரியாக எள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது, மழை குறைவு காரணமாக பச்சைப்பூச்சி தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. இந்த பச்சைப் பூச்சிகள், எள் செடிகளில் உள்ள இலைகள் மற்றும் பூக்களை விரும்பி சாப்பிடுவதால், செடிகளின் வளர்ச்சி தடுக்கப்பட்டு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், எள் விளைச்சல் குறைய வாய்ப்புள்ளது. இதை தடுப்பதற்கான ஆலோசனை மற்றும் விளக்கங்களை கிருஷ்ணராயபுரம் வேளாண்மைத்துறை அலுவலக அதிகாரிகள் வழங்கி, எள் செடிகளை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும், என்பதே விவசாயிகளின் கோரிக்கை.

## <u>தஞ்சாவூரில் இடி, மின்னலுடன் மழை</u>

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், நேற்றுமுன்தினம் இரவு இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக நெய்வாசல் தென்பாதியில், 81.40 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக, கோடையை மிஞ்சும் விதத்தில் வெயில் கொளுத்தியது. கடலோர கிராமங்கள் உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் மழை பெய்தும், தஞ்சை நகரில் வெயிலின் தாக்கம் சற்றும் குறையவில்லை. நேற்றுமுன்தினம் காலை முதல் மாலை வரை வெயில் வறுத்தெடுத்தது. இரவு, 7 மணிக்கு மேல் குளிர்ந்த காற்றுடன் மழை பெய்யத் துவங்கியது. அவ்வப்போது இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக, நெய்வாசல் தென்பாதி பகுதியில், 81.40 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் இதர பகுதிகளில், பெய்துள்ள மழை அளவு (மி.மீ.,)வருமாறு: ஆதிராம்பட்டிணம், 28.40, கும்பகோணம், 7.40, பாபநாசம், 7.00, தஞ்சாவூர் 16.20, திருவையாறு, 20.50, திருகாட்டுப்பள்ளி, 3.40, வல்லம், 14.50, கல்லணை, 19.60, அய்யம்பேட்டை, 2.00, திருவிடைமருதூர், 5.20, மணியலாறு, 23.40, பூதலூர், 6.40, வெட்டிக்காடு, 8.40, ஒரத்தநாடு, 18.50, மதுக்கூர், 18.00, பட்டுக்கோட்டை, 11.00, பேராவூரணி, 23.40 மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும், 315 மி.மீ., மழையும், சராசரியாக, 15 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் சம்பா சாகுபடி பணிகள் துவங்கியுள்ள நிலையில், இந்த மழை விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. அதே சமயம் குறுவை பருவத்துக்கான அறுவடை துவங்கியுள்ள நிலையில், இந்த மழை குறுவை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளை நிலைகுலைய செய்துள்ளது.

**<u>காரீப் பருவத்தில், 5.20 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு</u>**

தஞ்சாவூர்: "மாவட்டத்தில், 2014- 15ம் ஆண்டு காரீப் பருவத்தில், 5.20 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது' என, கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: தஞ்சை மாவட்டத்தில், 2014- 15ம் ஆண்டு காரீப் பருவத்தில், குறுவை பட்டம் நெல் அறுவடைக்காக, 103 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால், விவசாயிகளின் நலன் கருதி, நேற்று முதல் இந்த கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. கடந்த, 2013- 14ம் ஆண்டு காரீப் பருவத்தில், 3,01,932 மெட்ரிக் டன் நெல் விவசாயி களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கான தொகை, 424 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்யப்பட்டது. நடப்பு காரீப் பருவம், 2014- 15ம் ஆண்டுக்கு, ஐந்து லட்சத்து, 20 ஆயிரத்து, 57 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் நடப்பு, 2014- 15ம் ஆண்டு காரீப் பருவத்துக்கு சன்ன ரகம் குவிண்டால்,1400 ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன் குவிண்டாலுக்கு ஊக்கத்தொகையாக, 70 ரூபாய் சேர்த்து சன்ன ரகம் குவிண்டால், 1,470 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படவுள்ளது. இதே போல் பொதுரகம் குவிண்டால், 1,360 ரூபாய் மற்றும் ஊக்கத்தொகை, 50 ரூபாய் சேர்த்து, 1,410 ரூபாய் விலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு, நெல்லை அருகில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெற வேண்டும். விவசாயிகளின் கோரிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில், கூடுதலாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**<u>திருவாரூர், நாகை மாவட்டங்களுக்கு 1,350 டன் உர மூட்டைகள் வருகை</u>**

திருவாரூர்: சென்னை துறைமுகத்திலிருந்து, 21 வேகன்கள் மூலம், திருவாரூர் ரயில் நிலையத்திற்கு, 1,350 டன் உர மூட்டைகள், கொண்டு வரப்பட்டது. திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில், 3 லட்சத்து, 66 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதில், 80 சதவிகிதம் நேரடி நெல் விதைப்பு சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளதால், இந்த பயிர்கள், ஒரு மாத பயிராக வளர்ந்து வந்துள்ளன. இவைகளுக்கு தேவையான யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி., போன்ற உரங்கள், வெளி மாநிலத்திலிருந்தும், வெளிநாடு களிலிருந்தும் வரவழைக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தின் மூலம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சப்ளை செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த மாதம் ஒடிஸா மாநிலத்திலிருந்து ரயில் மூலம் திருவாரூக்கு வந்த, 2,500 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரங்கள், திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதே போல், ரஷியாவிலிருந்து சென்னை துறைமுகத்திற்கு வந்த யூரியா உரங்களில், 2,650 மெட்ரிக் டன் உரங்கள், 42 வேகன்கள் மூலம் கடந்த, 4ம் தேதி திருவாரூர் ரயில் நிலையத்திற்கு வந்தது. இந்த உரங்களை, விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்காக, லாரிகள் மூலம் நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதே போல், நேற்றும், 21 வேகன்களில், 1,350 மெட்ரிக் டன் உரங்கள் திருவாரூர் ரயில் நிலையம் வந்தன. அவை, லாரி மூலம் நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதற்கான பணியை, மண்டல இணை பதிவாளர் ரவிச்சந்திரன் மேற்பார்வையில் துணை பதிவாளர் சத்தியமூர்த்தி மற்றும்

அலுவலர்கள் மேற்கொண்டனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் 650 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் நேற்று வரை, 650 மெட்ரிக் டன் குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது, என்று கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:

திருவாரூர் மாவட்டத்தில், சாகுபடி செய்யப்பட்ட, 64 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான குறுவை பயிர்கள், அறுவடை நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் வரை, 40 ஆயிரம் ஏக்கரில் அறுவடை முடிந்துள்ளது. விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்வதற்காக மாவட்டத்தில், ஏழு தாலுகாக்களிலும் மொத்தம், 52 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கடந்த, 1ம் தேதி முதல் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த கொள்முதல் நிலையங்கள் மூலம், நேற்று வரை, 650 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சன்ன ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,470ம், பொது ரகத்திற்கு, 1,410ம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, தேவைப்படும் இடங்களில், அரசு கொள்முதல் நிலையங்கள் திறக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். கொள்முதல் நிலையங்களில் விவசாயி களுக்கு ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அது குறித்து முதுநிலை மண்டல மேலாளர், 9442255542 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தால், உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.

மேலும், குடவாசல் தாலுக்காவில் உள்ள ஆலத்தூர் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் மற்றும் நன்னிலம் தாலுகாவில் உள்ள மோட்டாத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஆகியவற்றை கலெக்டர் மதிவாணன் ஆய்வு செய்து விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். ஆய்வின் போது, நுகர் பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் இருப்பு வைப்பு

ராமநாதபுரம் :""விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் மாவட்டத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.அவர் கூறியதாவது:ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாய பணிகள் பெரும்பாலும் வடகிழக்கு பருவமழையை நம்பியே நடக்கிறது. செப்டம்பர் மாதத்தில் கிடைக்கப்பெற்ற மழையை பயன்படுத்தி முன் பருவ விதைப்பாக 75,000 எக்டேரில் நெல் விதைகள் மானாவாரியாக விதைக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக மாவட்டம் முழுவதும் கிடைக்க பெற்ற மழையினை தொடர்ந்து, ஏற்கனவே முன் பருவ விதைப்பாக விதைக்கப்பட்ட பயிர்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது. தற்போது பயிர்களுக்கு தேவையான அடியுரங்களான டி.ஏ.பி., -என்.பி.கே., கலப்புரங்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகள் வயலில் இட்டு வருகின்றனர். மேலும், யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ் மற்றும் கலப்புரங்கள் தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மண் ஆய்வுகளின் அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான அடியுரங்களை மட்டும் இட்டு பயடையலாம், என்றார்.

## வத்திராயிருப்பில் 39 மி.மீ., மழை

விருதுநகர்:விருதுநகர் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோடையை மிஞ்சும் அளவிற்கு வெயில் சுட்டெரித்ததால் பொதுமக்கள் அவதிப்பட்டனர். இந்நிலையில் சில நாட்களாக மாலையில் இடி, மின்னலுடன் பலத்த மழைபெய்துவருகிறது. நேற்று காலை 8.30 மணிப்படி மழையளவு (மி.மீ.,): அருப்புக்கோட்டை 21, ஸ்ரீவி.,4, சிவகாசி 1.20, விருதுநகர் 6.80, திருச்சுழி 1, ராஜபாளையம் 4.20, காரியாபட்டி 2.20, வத்திராயிருப்பு 39, பிளவக்கல் 7, கோவிலாங்குளம் 4.80,மொத்த மழையளவு 91.20.

## குமரியில் சாரல் மழை நீடிப்பு

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் சாரல் மழை தொடர்ந்து நீடித்து வருகிறது. திருவட்டார், குளச்சல், புத்தன்அணை, முள்ளங்கினாவிளை பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மழை கொட்டியது.பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் அணை பகுதிகளிலும் மழை பெய்தது. திருவட்டாரில் அதிகபட்சமாக 18 மி.மீ. மழை பதிவானது. மலையோர பகுதிகளிலும் மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 31.75 அடியாகவும், பெருஞ்சாணி அணை நீர் மட்டம் 65.60 அடியாகவும் இருந்தது. அணைக்கு வினாடிக்கு 246 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 510 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.சிற்றார்-1 அணையின் நீர்மட்டம் 15.32 அடியாகவும், சிற்றார்-2 அணையின் நீர்மட்டம் 15.45 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 5.50 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 53.72 அடியாகவும் உள்ளது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் சப்ளை செய்யப்படும் முக்கடல் அணையின் நீர்மட்டம் 24 அடியை கடந்தது.

## தூத்துக்குடி துறைமுகத்தில் 2 ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு

தூத்துக்குடி : வங்க கடலில் புயல் சின்னம் உருவாகியிருப் பதால்,தூத்துக்குடி துறைமுகத்தில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம், என எச்சரிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் வங்க கடலில் அந்தமான் அருகே காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டு, புயல் சின்னமாக மாறியுள்ளது. இதற்கு ஹீட் ஹீட் என, பெயரிடப்பட்டுள்ளது. ஒடிசா மாநிலத்தில் அக்.,12 ல் கரை கடக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் அதிக பாதிப்புகள் இருக்காது, என வானிலை ஆய்வு மையம்

தெரிவித்துள்ளது. கடலோர பகுதிகளில் கனமழையும், காற்றின் வேகம் அதிகரிக்கும். இதனை தொடர்ந்து கடலோர பாதுகாப்பு கருதி, தூத்துக்குடி துறைமுகத்தில் நேற்று மதியம் 2.30 மணிக்கு 2 ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. காற்றின் வேகம் அதிகரித்துள்ளதால், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம், என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடலோர பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**டெல்டாவில் கனமழை**

தஞ்சை: காவிரி டெல்டா மாவட்டங்கள் உள்பட தமிழகத்தின் பல இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் தொடங்கி பரவலாக மழை பெய்தது. காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர் ஆகிய பகுதிகளில் பலத்த மழை கொட்டி தீர்த்தது. தஞ்சை மாவட்ட கடலோர பகுதியான அதிராம்பட்டினம், மல்லிப்பட்டினம் ஆகிய பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு தொடங்கிய மழை 11 மணி வரை இடி, மின்னலுடன் பலமாக கொட்டி யது. திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் இரவு 9 மணி முதல் பலத்த மழை பெய்தது. நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் மிக பலத்த மழை கொட்டியது. பட்டுக்கோட்டை, திருத்துறைப் பூண்டி, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், திருவையாறு மற்றும் மன்னார்குடி, நாகை, வல்லம், ஒரத்தநாடு, மதுக்கூர் உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்தது. புதுக்கோட்டை மாவட்டத்தில்

அறந்தாங்கி, பொன்னமராவதி, இலுப்பூர், விராலிமலையில் நேற்று முன்தினம் இரவு சாரல் மழை பெய்தது. திருமயம், மணமேல்குடியில் மாலை 6 மணி முதல் 8 வரை பலத்த மழை பெய்தது. வேதாரண்யம், அதிராம்பட்டினத்தில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதேபோல், திருச்சி, அரியலூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் மழை பெய்தது.

## <u>தளி அருகே தொடர்மழையால் 9 ஆண்டுகளாக வறண்டு கிடந்த மாருப்பள்ளி ஏரி நிரம்பியது</u>

தேன்கனிக்கோட்டை, : தளி அருகே கடந்த சில நாட்களாக பெய்த மழைக்கு ஒன்பது வருடங்களாக வற்றிக்கிடந்த மாருப்பள்ளி ஏரி நிறம்பியதால் கிராம மக்கள் கங்கா பூஜை செய்து வழிபாடு நடத்தினர். கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, தளி, கெலமங்கலம், அஞ்செட்டி பகுதியில் கடந்த சில வருடங்களாகவே போதிய மழையின்றி நீர்நிலைகள் வறண்டன. ஏரிகள் வற்றியதால் விவசாயம் பாதிக்கப் பட்டது. மாவட்டத்தில் அதிக அளவு மழை பெய்யும் தளி பகுதியை லிட்டில் இங்கிலாந்து என்றழைப்பது வழக்கம். ஆனால், தளியிலும் போதிய மழையில்லாததால் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டது. சுற்றியுள்ள அனைத்து ஏரிகளும் தண்ணீரின்றி வறண்டன. இதையடுத்து, மழை வேண்டி மக்கள் பல்வேறு சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டனர். கிராமங்களில் கழுதைகளுக்கு திருமணம் செய்து வைத்தனர். ஏரிகளில் திரண்டு ஒப்பாரி வைத்து அழுதனர். மேலும், வருணபகவானுக்கு சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர். இந்நிலையில் கடந்த வாரம் தளியில் ஒரே நாளில் 120 மில்லி மீட்டர் மழை பெய்தது. அடுத்தடுத்து கடந்த மூன்று நாட்களாக தளி பகுதியில் நல்ல மழை பெய்து வருகின்றது. நேற்று முன்தினம் இரவு பெய்த மழைக்கு தளி அருகே உள்ள மாருப் பள்ளி ஏரி முழு கொள்ளளவு எட்டியுள்ளது. அங்கிருந்து உபரி நீர் பெருக்கெடுத்துச் செல்கிறது. இதையடுத்து, நேற்று காலை மாருப்பள்ளி

ஏரியில் மக்கள் மகிழ்ச்சியுடன் திரண்டனர். பின்னர், கோமாதா பூஜை செய்தும், காங்கா பூஜை செய்து வழிபட்டனர். இதுகுறித்து மாருப்பள்ளி கிராம மக்கள் கூறியதாவது: கடந்த 9 ஆண்டுகளாக தளி பகுதியில் போதிய மழையின்றி ஏரி, குளங்கள் வற்றி விட்டன. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டது. குடிநீர் பிரச்னை அதிகரித்து வந்தது. இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக தளி பகுதியில் அவ்வப்போது மழை பெய்து வருவதால் வற்றி கிடந்த மாருப்பள்ளி ஏரி முழு கெள்ளளவை எட்டி உபரி நீர் செல்கிறது. இதனால், விவசாயம் செழிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## திருச்சி மாவட்டத்தில் 137 மி.மீ. மழை

திருச்சி:திருச்சி மாவட்டத்தில் 137 மி.மீ மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இந்த மாத இறுதிக்குள் தொடங்கும் என எதிர்ப்பார்க்கப்படும் நிலையில், வங்கக் கடலில் திடீரென குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானது. அது வழுவடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி உள் ளது. இது புயலாக வலு வடைய வாய்ப்பு உள்ளது. இதனால் தமிழகம், ஆந்திரா, புதுச்சேரி ஆகிய மாநிலங்க ளில் மழை பெய் யும் என வானிலை மையம் அறிவித்திருந்தது. இதன் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. திருச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட் க ளாக கோடையைப் போல் வெயில் கொளுத்தி வந்தது. மக்களை குளிர்விக்கும் வகையில் நேற்றுமுன்தினம் இரவு 10மணிக்கு பெய்யத் தொடங்கிய சாரல் மழை நேற்று அதிகாலை வரை நீட்டித்தது. மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளிலும் மழை நீடித்தது. இதனால் விவசாயிகள் உள்ளிட்ட அனைத் துத் தரப்பினரும் மகிழ்ச்சி அடைந்துள்ள னர். இதில் மருங்காபுரி, புள்ளம்பாடி, மணப்பாறை, கள்ளக்குடி, பொன்னியாறு டேம், வாத்தலை அணைக் கட்டு உள்ளிட்ட பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதில் அதிகபட்சமாக

தென்பரநாடு மட் டும் 15 மி.மீ மழை பெய்துள் ளது. நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீ) வருமாறு: லால்குடி 10.30, முசிறி 2, தா.பேட்டை 8, துறையூர் 3, திருச்சி ஏர் போர்ட் 6.70, திருச்சி டவுன் 8.40, நவலூர் குட்டப்பட்டு 4.20, நந்தியார் தலைப்பு 4, வாத்தலை அணைக்கட்டு 13.80, சமயபுரம் 14, தேவிமங்கலம் 4.20, சிறுகுடி 5, புலிவ லம் 10, குப்பம்பட்டி 2, பொன்மலை 7, திருச்சி ஜங் ஷன் 6.80, துவாக்குடி மலை 13. மாவட்டத்தில் மொத்தம் 137.40 மி.மீ மழை பெய்துள் ளது. சராசரியாக 5.72 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

## <u>திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 650 மெ.டன் குறுவை நெல் கொள்முதல்</u>

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 650 மெ.டன் குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருவாரூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட 64 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான குறுவை பயிர் கள் தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் வரை சுமார் 40 ஆயிரம் ஏக்கரில் அறுவடை முடிந்துள்ளது. விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்வதற்காக மாவட்டத்தில் உள்ள 7 தாலுகாக்களிலும் மொத்தம் 52 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கடந்த 1ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. இந்த கொள்முதல் நிலையங்கள் மூலம் நேற்று வரை 650 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சன்ன ரகத்திற்கு குவின்டால் ஒன்றுக்கு ரூ. 1,470, பொது ரகத்திற்கு ரூ.1,410 வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று தேவைப்படும் இடங்களில் அரசு கொள்முதல் நிலையங்கள் திறக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அது குறித்து முதுநிலை மண்டல மேலாளர் கைபேசி எண் 9442255542 என்ற எண்

ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். மேலும் குடவாசல் தாலுகாவில் உள்ள ஆலத்தூர் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் மற்றும் நன்னிலம் தாலுகாவில் உள்ள மோட்டாத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஆகியவற்றினை கலெக்டர் மதிவாணன் நேரில் ஆய்வு செய்து விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். ஆய்வின் போது நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## <u>பயறு வகைகளில் அதிக விளைச்சல் பெற ஆலோசனை</u>

பழநி, : பயிறு வகை களில் அதிகவிளைச்சல் பெற டிஏபி கரைசல் பயன்படுத்த வேண்டுமென வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பழநிபகுதியில் 10ஆயி ரம் எக்டேருக்கு மேல் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள பயறு வகைகளில் நல்ல தரமான பயறு பெறு வது குறித்து வேளாண் அதிகாரி கள் கூறியதாவது: பயறு வகைகளில் கூடுதல் மகசூல் பெற டிஏபி கரைசலை இருமுறை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டிஏபி உரத்தை முதல் நாள் 10 லிட்டர் நல்ல தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் மாலை, ஊற வைத்த கரைசலில் இருந்து தெளித்த நீரை வடித்து எடுத்து அதனை 190 லிட் டர் நல்ல தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் பூக்கும் தருவாயில் ஒரு முறையும், மறுமுறை மேற்கூறிய முறையில் மீண்டும் 10 முதல் 15 நாள் இடைவெளியில் கைத்தெளிப்பான் மூலம் 200 லிட்டரில் கலந்து தெளிக்க வேண்டும். இதன்மூலம் அதிக பூக்கள் பூத்து, திறட்சியான மணிகளுடன் நல்ல விளைச்சலும் பெறலாம்.தற்போது டிஏபி கரை சல், விரிவாக்க மையத் தில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. தேவைப் படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் உரிய

மானிய விண்ணப்பம் பெற்று வாங்கி கொள்ள லாம் வேளாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வரத்து குறைந்ததால் புளி கிலோவுக்கு ரூ15 விலை உயர்வு

சேலம், : தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் அதிகளவில் புளி விளைச்சல் தருகிறது. இப்பகுதிகளில் அறுவடை செய்யும் புளியை வியாபாரிகள் பல பகுதிகளுக்கு அனுப்பி வருகின்றனர். தற்போது புளி மண்டிக்கு புளி வரத்து குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது. சேலம் லீ பஜார் புளி மண்டி வியாபாரிகள் கூறியதாவது: சேலம் லீ பஜாரில் பத்துக்கும் மேற்பட்ட மொத்த புளி வியாபாரிகள் உள்ளனர். இங்கு தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து சிப்பம் கணக்கில் புளி வரும். கடந்த மார்ச், ஏப்ரலில் ஓரளவிற்கு புளி வரத்து இருந்தது. தற்போது வரத்து பாதியாக குறைந்ததால் விலை உயர்ந்துள்ளது. கடந்த இரு மாதத்திற்கு முன்பு ரூ45 முதல் ரூ55க்கு விற்ற (ஒரு கிலோ) பூ புளி தற்போது ரூ50 முதல் ரூ70 எனவும், ரூ60 முதல் ரூ70க்கு விற்ற கரிபுளி ரூ70 முதல் ரூ90 எனவும், ரூ47 முதல் ரூ60க்கு விற்ற சப்பாத்தி புளி ரூ62 முதல் ரூ75 என விற்பனை செய்யப்படுகிறது. கிலோவுக்கு ரூ15 முதல் ரூ20 வரை புளி விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு புளி மண்டி வியாபாரிகள் கூறினர்.

## முள்ளங்கி கிலோ ரூ20க்கு விற்பனை

சேலம், : வரத்து குறைந்ததால் முள்ளங்கி விலை அதிகரித்துள்ளது. இதனால் ஒரு கிலோ முள்ளங்கி ரூ 20-க்கு விற்கப்பட்டு வருகிறது.சேலம் மார்க்கெட்டுக்கு மாவட்டத்தின் தலைவாசல், ஆத்தூர், கெங்கவல்லி, ஏத்தாப்பூர், வாழப்பாடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தும் மற்றும் பிற பகுதிகளான பெங்களூர், ஓசூர், ராயக்கோட்டை, தளி, தேன்கனிக்கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தும் முள்ளங்கி வரத்து வருகிறது. கடந்த வாரம் வரை தினமும் 180 முதல் 200

மூட்டைகள் வரை வந்து கொண்டிருந்த முள்ளங்கி வரத்து தற்போது 100 முதல் 120 மூட்டைகளாக குறைந்துள்ளது. இதனால் விலையும் சென்ற வாரத்தில் விற்கப்பட்டதை விட அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ ரூ12 முதல் ரூ15 வரை விற்கப்பட்டு வந்த முள்ளங்கி தற்போது விலை அதிகரித்து கிலோ ரூ20க்கு விற்பனை செய்யப்படுகிறது. உள்ளூரில் இருந்து வரும் முள்ளங்கி வரத்து அதிகரித்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 14 விவசாய தோட்டங்களில் சோலார் பம்பு செட்டுகள்

நாமக்கல், : நாமக்கல் மாவட்ட வேளாண் பொறி யியல் துறையில் நடைபெற்று வரும் பணிகளை கலெக்டர் தட்சிணாமூர்த்தி நேற்று ஆய்வு செய்தார்.நாமக்கல் அருகேயுள்ள கீழ்சாத்தம்பூரில், விவசாயிகளின் நீர் பாசன தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், மரபு சாரா எரிசக்தி (சோலார்) மூலம் இயங்கக்கூடிய பம்பு செட்டுகள் பொருத்தி பாசன வசதி ஏற்படுத்தித் தரும் சிறப்பு திட்டத்தின் கீழ் சோலார் பம்பு செட் அமைத்துள்ள அசோகன் என்பவரின் தோட்டத்தில் கலெக்டர் ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது: டீசல் மற்றும் மண்ணெண்ணெய் இல்லாமல் சூரிய ஒளியை சேகரித்து, போட்டோ வோல்டிக் பேனல்கள் மூலம் ஒளிசக்தியை மின்சக்தியாக மாற்றி மின் உற்பத்தி செய்து, மின்மோட்டாரை இயக்கி பகலில் தொடர்ந்து தடை யற்ற பாசனத்திற்கு சேலார் பம்ப் செட்டுகள் வழி வகுக்கிறது. சுற்றுப்புற சூழல் மாசுபடாத வகை யிலும், கச்சா எண்ணெய் பயன்பா ட்டை குறைக்க உதவும் வகையில் இத்தகைய சோலார் பம்பு செட்கள் இருக்கிறது.தொலைதூர பகுதிகளுக்கும், மின் இணைப்பு பெறமுடியாத பகுதிகளுக்கும் இந்த அமைப்பை ஏற்படுத்தி தடையின்றி பகலில் விவசாய நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்திக் கொள்ள முடியும். இத்திட்டத்துக்கான மொத்த செலவில் 80 சதவீதம் அதாவது,

திறந்தவெளி கிணற்றுக்கு ரூ.3.84 லட்சம், ஆழ்துளை கிணற்றுக்கு ரூ.3.35 லட்சம், மேற்பரப்பு நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு ரூ.3.99 லட்சம் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.நாமக்கல் மாவட்டத்துக்கு மொத்தம் 126 விவசாயிகளுக்கு சோலார் பம்பு செட் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 14 விவசாயிகளின் தோட்டங்களில் சோலார் பம்பு செட்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, 8 இடங்களில் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார். இந்த ஆய்வின்போது கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார், உதவி செயற்பொறியாளர்கள் நடராசன், நாகராசன், உதவிப்பொறியாளர் மணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## தீபாவளி விற்பனை களை கட்டியது உளுத்தம்பருப்பு விலை சரிவு துவரம், பாசிப்பருப்பு விலை உயர்வு

சேலம், : சேலம் செவ்வாய்பேட்டை, லீ பஜாரில் தீபாவளி விற்பனை சூடு பிடித்துள்ள நிலையில் உளுத்தம்பருப்பு மூட்டைக்கு(100 கிலோ) ரூ2 ஆயிரம் குறைந்துள்ளது. துவரம் பருப்பு, பாசிப்பருப்பின் விலை உயர்ந்துள்ளது. இந்தியாவில் மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, கடலை பருப்பு, பாசிப்பருப்பு, பச்சை பயறு, வெள்ளை பட்டாணி, பச்சைப்பட்டாணி, கொண்டைக்கடலை, கொத்தமல்லி உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இங்கு ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அறுவடை செய்யும் தானிய வகைகளை வியாபாரிகள் தமிழகம், கர்நாடக, கேரளா, ஆந்திரா மற்றும் பல மாநிலங்களுக்கு அனுப்பி வருகின்றனர். கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் வட மாநிலங்களில் தானிய வகைகளின் சீசன் களை கட்டியுள்ளதால், அங்கிருந்து சேலம் லீபஜார், செவ்வாய்பேட்டை

மார்க்கெட்டுக்கு வரத்து அதிகமாக இருந்தது. தீபாவளி பண்டிகையை ஒட்டி கடந்த சில தினங்களாக விற்பனை சூடு பிடித்துள்ளது. ஆனால் பாசிப்பருப்பு, துவரம் பருப்பு, கடலை பருப்பு உள்ளிட்டவைகளின் வரத்து குறைந்ததால் விலை அதிகரித்துள்ளது. அதேநேரத்தில் உளுத்தம்பருப்பின் வரத்து அதிகரிப்பால் விலை சரிந்துள்ளது. இது குறித்து சேலம் செவ்வாய்பேட்டை வணிகர்கள் கூறியதாவது:தற்போது சேலம் செவ்வாய்பேட்டை, லீ பஜாரில் துவரம் பருப்பு, பாசிப்பருப்பு, கடலை பருப்பு, பாசிப்பயிறு உள்ளிட்ட தானிய வகைகளின் விலை உயர்ந்துள்ளது. அதேநேரத்தில் தற்போது மகாராஷ்டிராவில் இருந்து உளுத்தம்பருப்பின் வரத்து அதிகரித்துள்ளது. 15 நாட்களுக்கு முன்பு 100 கிலோ எடைக்கொண்ட ஒரு மூட்டை(100 கிலோ) முதல் ரக உளுத்தம்பருப்பு ரூ10 ஆயிரம் என விற்பனை செய்யப்பட்டது. தற்போது முதல் தி7800 முதல் ரூ8000 எனவும், இரண்டாம் ரகம் ரூ 7200 முதல் தி7500 என விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மூட்டை தி2000 வரை விலை சரிந்துள்ளது. அதே நேரத்தில் ரூ5900 முதல் ரூ6500 என விற்கப்பட்ட துவரம் பருப்பு ஒரு மூட்டை(100 கிலோ)ரூ 7300 முதல் ரூ7500 எனவும், ரூ8200 முதல் ரூ8400 வரை விற்ற பாசிப்பருப்பு ஒரு மூட்டை(100 கிலோ) ரூ8800 முதல் ரூ9100 என விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு வணிகர்கள் கூறினர்.

## குச்சிக்காடு கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம்

ராசிபுரம், : ராசிபுரம் அருகேயுள்ள குச்சிக்காடு கிராமத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. ராசிபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட குச்சிக்காடு கிராமத்தில் கால்நடை பராமரிப்பு துறை மூலம் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் நாமக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்பு துணை இயக்குநர் மருத்துவர் ரவிச்சந்திரன் தலைமையில் மருத்துவ குழுவினர், கால்நடைகளை

பரிசோதித்து சிகிச்சை அளித்தனர். இதில் 30 மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், 60 மாடுகளுக்கு சினை பரிசோதனை, 540 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கல் மருந்து வழங்கப்பட்டது. மேலும் 44செம்மறி ஆடுகள், 498 வெள்ளாடுகள், 190கோழிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த முகாமில் கால்நடை அலுவலர்கள் ஆனந்தபாபு, மணி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் பழனியம்மாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நெற்பயிரை பாதுகாக்க வரப்புகளில் பயறு வகைகளை பயிரிட வேண்டும்

புதுக்கோட்டை: நெற்பயிரை பாதுகாக்க வரப்புகளில் பயறு வகைகளை பயிரிட வேண்டும் என விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.புதுக்கோட்டை வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் நடவு செய்யும்போது நெல் வயல்களில் வரப்பு பயிராக உளுந்து, பாசிப்பயறு, தட்டை பயறு, துவரை ஆகிய விதைகளை வயலில் நான்கு வரப்புகளிலும் ஒரு அடி இடைவெளியில் ஊன்ற வேண்டும். இதனால் நெற்பயிரை தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான பச்சை தத்துப்பூச்சி, கதிர்நாவாய் பூச்சி, இலைப்பேன் மற்றும் கடித்து சாப்பிடும் புழுக்களான இலைசுருட்டுப் புழு, கூண்டு புழு ஆகியவைகளின் தாய் பூச்சிகள் பயறு வகை பயிர்களின் இலைகள் உண்பதற்கு மென்மையாக இருப்பதால் முதலில் முட்டையை இலையின் பின்புறத்தில் இடும். இதிலிருந்து வெளிவரும் பூச்சிகள் பயறு வகை பயிர்களைத்தான் தாக்கும். நெற்பயிரைத் தாக்காது. இதன் மூலம் நெற் பயிரை புழு பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாப்பதுடன் எந்த வகையான புழு பூச்சிகள் எவ்வளவு உள்ளது என்பதை அறிந்து அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு முறைகளை செய்யவும் உதவுகிறது. நெல் நடவு செய்த வரப்புகளில் பயறு வகை பயிர்கள் ஊன்றுவதால் 65 முதல் 90 நாட்களில் பயறு வகை அறுவடை செய்வதோடு கூடுதலான வருமானமும் கிடைக்கிறது. நெல் நடவு செய்யும்போது வயல்களில் எலிகளினால் அதிக சேதம் உண்டாகிறது.

ஆகையால் வரப்புகளில் பயறு வகைப் பயிர்கள் ஊன்றுவதால் எலிகள் மிகவும் விரும்பி பயறுகளை சாப்பிடுவதுடன் நெல் பயிரை தாக்குவது இதனால் குறைகிறது. நெல் வரப்புகளில் பயறு வகைப் பயிர்களை அறுவடை செய்த பின் அதன் செடிகளிலுள்ள இலைகள் உரமாகவும், ஆடு, மாடுகளுக்கு நல்ல தீவனமாகவும் பயன்படுகிறது. புழு பூச்சி தாக்குதலில் இருந்து நெற்பயிரை பாதுகாக்க வயல் வரப்புகளில் பயறு வகைகளை பயிரிட வேண்டும். இவ்வாறு விவசாயிகளுக்கு புதுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் அறிவுறுத்தியுள்ளார்.

## <u>வம்பனில் நாளை பயிர், கால்நடை காப்பீடு பயிற்சி</u>

ஆலங்குடி: ஆலங்குடியை அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிர் மற்றும் கால்நடை காப்பீடு முறைகள் பற்றிய ஒருநாள் பயிற்சி நாளை (10ம் தேதி) நடக்க இருக்கிறது. இது குறித்து வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஞானமலர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பயிர் மற்றும் கால்நடைகளுக்கு காப்பீடு செய்வதன் முதல் நோக்கம், பயிர்களை இயற்கை சீற்றங்களான வறட்சி, புயல், அதிக வெப்பம், அதிக மழை, அதிவேக காற்று ஆகியவற்றிலிருந்து காப்பதற்கும், கால்நடைகளை கோமாரி நோய் போன்ற கொடிய நோய்களிலிருந்து காப்பதற்கும்தான். மத்திய அரசின் நிறுவனமான வேளாண் காப்பீட்டு நிறுவனம் பயிர் காப்பீடு மற்றும் கால்நடை காப்பீட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. காப்பீட்டுத் தொகையில் நான்கில் மூன்று பங்கை மத்திய மற்றும் மாநில அரசு மானியமாக வழங்குகிறது. ஒரு பங்கு மட்டும் செலுத்தினால் போதும். மேலும் தமிழக அரசு விவசாயிகள் கருத்தை கொண்டு பழைய காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தியது வரப்பிரசாதமாகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களாக வறட்சியி னால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் காப்பீட்டு திட்டத் தில் சேர்ந்த விவசாயிகளு க்கு இழப்பீடு வழங்க தமிழக அரசு

நிர்ணயித்துள்ளது. தாமதம் ஆனாலும் நிச்சயமாக காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைத்துவிடும் என்று கலெக்டர் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்ட அனைத்து விவசாயிகளும் பயிர் மற்றும் கால்நடை காப்பீடு செய்து பயன்பெறும் வகையில், காப்பீடு செய்யும் முறைகள் பற்றிய ஒருநாள் இலவச நிலையப் பயிற்சி நாளை (10ம் தேதி) வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் மத்திய அரசு காப்பீட்டு நிறுவனத்தின் அதிகாரி சிறப்புரையாற்றி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளிப்பார் என தெரிவிக்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் இப்பயிற்சியில் கல ந்து கொண்டு பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களு க்கு 04322290321, 94447 19043 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

## <u>கோமாரி நோயை தடுக்க கால்நடைத் துறை தீவிர நடவடிக்கை</u>

ஈரோடு: கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை தடுக்க கண்காணிப்பை தீவிரப்படுத்த ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை தடுக்கும் வகையில் தேசிய கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. ஆண்டுக்கு இருமுறை இந்த முகாம் நடத்தப் படுகிறது.இந்த ஆண்டு நடந்த முகாமில் மாவட்டம் முழுவதும் 3 லட்சத்து 69 ஆயிரத்து 900 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப் பட்டுள்ளது. இந்த கோமாரி நோய் காற்று மூலமாக கால்நடைகளுக்கு பரவும் என்பதால் வெளி மாநிலங்களில் இருந்து வரும் கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதா என்பது குறித்து கண்காணிக்கப்படுகிறது.

## பருத்தியை தாக்கும் வாடல் நோய் கட்டுப்படுத்துவது எப்படி?

பாடாலூர்: ஆலத் தூர் தாலுகா பகுதியில் பயிரிட்டுள்ள பருத்திச் செடியை தாக்கும் வாடல் நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் உதவி இயக்குனர் அண்ணாதுரை விளக்கம் அளித்துள்ளார். ஆலத்தூர் தாலுகா பகுதியில் உள்ள கிராமங்களில் விவசாயிகள் சுமார் 6 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். அதில் பருத்தி செடிகள் வாடி காய்ந்து வருகிறது. இது வாடல் நோயின் அறிகுறியாகும். இதனையறிந்த வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ஆனந்த், ஆலத்தூர் வேளாண் உதவி இயக்குனர் அண்ணாதுரை ஆகியோர் வயல்வெளியில் ஆய்வு செய்தனர். பின்னர் உதவி இயக்குனர் அண்ணா துரை கூறுகையில், வாடல்நோய் தாக்கப்பட்ட செடியின் மேல்பகுதி இலைகள் முதலில் வெளிர்பச்சை நிறமாக பின்பு கீழ்பகுதி இலைகளுக்கும் பரவும். நோய் தாக்குதல் தீவிரமாக இருக்கும் போது செடியில் உள்ள அனைத்து இலைகளும் வெளிர்பச்சை நிறமாக மாறி வாடுவதுடன் பின்னர் செடி காய்ந்து விடும். இது போல் காய்ந்து விடுவதால் மகசூல் இழப்பு ஏற்படுவதுடன் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும்.எனவே, வாடல் நோயின் அறிகுறி தென்பட்டால் கார்பண்டசிம் 50 சதவீத டபிள்யூ பி என்ற பூஞ்சாணக்கொல்லி மருந்து ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் அல்லது பெனோமைல் என்ற பூஞ்சாணக்கொல்லி மருந் தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்ற அளவிலும் பாதிக்கப்பட்ட செடி இருந்த இடத் திலும் அதை சுற்றியுள்ள செடியின் வேர்பகுதியிலும் ஊற்றி நோயினை கட்டுப்படுத்தி விவசாயிகள் பயனடையலாம் எனத் தெரிவித்தார்.

**சம்பா, தாளடி பயிரில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு யோசனை**

தஞ்சை: ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு முறைகளை பின்பற்றினால் சம்பா, தாளடி பயிரில் அதிக மகசூல் பெறலாம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.தஞ்சை வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளதாவது:தஞ்சை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கவுள்ளது. சம்பா, தாளடி பயிரை ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு முறைகளை பயன்படுத்தி குறைந்த செலவில் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம். இதற்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கையின்கீழ் விவசாயிகள் தங்களது வயலில் பூச்சி மற்றும் நோய்க்காரணிகளின் இருப்பிடமான வரப்பு மற்றும் வாய்க்கால் பகுதிகளை களைகளின்றி சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் எளிதில் பூச்சிகள் மற்றும் நோய்களின் பெருக்கம் மற்றும் பரவலை தடுக்க முடியும். வரப்பு பகுதிகளில் உளுந்து மற்றும் தட்டை பயிறு செடிகளை வளர்ப்பதன் மூலம் நன்மை செய்யும் பூச்சிகளான பொறிவண்டு, சிலந்தியின் பெருக்கம் அதிகரித்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் கட்டுப்படுத்தப்படுகிறது. நடவு வயலில் 8 அடிக்கு 1 அடி இடை வெளியில் பட்டம் பிரித்து நடவு செய்வதன் மூலம் அதிக காற்றோட்டம் மற்றும் சூரிய வெளிச்சம் இருப்பதால் பயிர்களுக்கு இடையேயான சூழ்நிலை பூச்சிகள், நோய் காரணிகளின் பெருக்கத்துக்கு ஒவ்வாததாக மாறுவதால் புகையான் மற்றும் தத்துப்பூச்சிகள் பாதிப்பு குறைக்கப் படுகிறது. சீரான மற்றும் தேவைக்கேற்ற உர நிர்வாகத்தின்கீழ் தேவைக்கேற்ப தழைச்சத்து இடப்படுவதால் இலைமடக்கு புழு புகையான், ஆணைக்கொம்பன் ஈ போன்ற அதிக மகசூல் இழப்பை ஏற்படுத்தக்கூடிய பூச்சிகள் கட்டுப்படுத்த படுவதோடு உரத்துக்கான செலவீனமும் குறைக்கப்படுகிறது. நீர் மேலாண்மை நடவடிக்கைகளில் ஒன்றான காய்ச்சலும் பாய்ச்சலும் முறையை பயன்படுத்துவதால் குருத்து ஈ, கூண்டுப் புழு ஆகியவற்றின் இனப்பெருக்கம் முற்றிலுமாக தடை செய்யப்பட்டு மகசூல் இழப்பு தடுக்கப்படுகிறது. நன்மை செய்யும்

பாக்டீரியாவான பேசில்லஸ் துறின்ஞ்சியன்சிஸ் ஒரு ஏக்கருக்கு 400 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீர் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிப்பதால் இலைமடக்குப்புழு மற்றும் தண்டு துளைப்பான் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குறைந்த செலவில் சுற்றுப்புற சூழலை பாது காத்து அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு தஞ்சை வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார்.

## 2ம்எண் புயல் கூண்டு ஏற்றம் நள்ளிரவில் புதுவையில் மழை

புதுச்சேரி, : புதுவையில் நேற்று 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. வடக்கு அந்தமான் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. போர்ட் பிளேருக்கு கிழக்கே வங்க கடலில் இது நிலை கொண்டுள்ளது.இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறியது. இந்த புயலுக்கு ஹூட் ஹூட் என பெயரிடப்பட்டுள்ளது. இது ஆந்திரா, ஒடிசா நோக்கி நகர்ந்து வருகிறது. வருகிற 12ம்தேதி பிற்பகலில் ஆந்திராவின் விசாகப்பட்டினத்துக்கும் ஒடிசாவின் கோபால்பூருக்கும் இடையே கரையை கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புயலால் வங்க கடலில் ஆந்திரா அருகே உருவான வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெற்றும் என்று வானிலை மையம் அறிவித்தது.இதனால் புதுவை துறைமுகத்தில் நேற்று முன்தினம் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. தொடர்ந்து நேற்று 2ம் எண் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் நள்ளிரவில் கனமழை பெய்து குளிர்வித்தது.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>கால்நடை தீவன வளர்ப்புக்கு அரசு மானியம் அரியலூர் கலெக்டர் தகவல்</u>

கால்நடை தீவன வளர்ப்புக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது என்று அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது ;- பசுந்தீவனம் கால்நடைகளின் உற்பத் திக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் இன்றி யமையாத காரணிகள் ஆகும். பால் உற்பத்தியைப் பெருக்கு வதற்கு, தேவையான அளவு பசுந்தீவனம் வழங்குவது மிகவும் இன்றியமையாதது. கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவினத்தில் 70 விழுக்காடு, தீவன மற்றும் பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. கால்நடைகளுக்கு பசுந்தீவனத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி உள்ளது. 3 ஆண்டுகளாக ஆகவே, தீவனப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும், கால்நடை வளர்ப் போர் பசுந்தீவனத்தை உற்ப த்தி செய்வதை ஊக்கப் படுத்தும் வகையிலும் தமிழக அரசு கடந்த 3 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வரு கிறது. விவசாயிகளின் வாழ் க்கைத் தரத்தினை மேம்படு த்தும் நோக்குடன் கால்நடை துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத் துடன் கூடிய தீவனப்பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தபடவுள்ளது.

நேப்பியர் தீவனப்பயிர்

அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் தீவனப்பயிர் இறவையில் 0.25 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திட ரூ.2 ஆயிரம் மானியம் (100 சதவீதம் மானியம்) மானாவரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம் மற்றும்

தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட ரூ.550 மானியம். தெளிப்பு நீர்பாசன கருவி கள் நிறுவுவதற்கு விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரத்து 750 (75 சதவீதம் மானியம்). அகத்தி மர வகை தீவன பயிர் சாகுபடி செய்திட 100 சதவீத மானியத்துடன் அகத்தி விதைகள் வினியோகம். அசோலா திடல் அமைக்க ரூ.1,600 மானியம் (100 சதவீதம் மானியம்) வழங்கப்பட உள்ளது. மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்ப முள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியை சார்ந்த கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெற விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ண ப்பம் அளித்திடுமாறு கேட்டு கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

**தோகைமலை பகுதியில் சம்பா சாகுபடி தொடங்கியது விவசாய பணிகள் தீவிரம்**

தோகைமலை பகுதியில் மழை பெய்து வரும் நிலையில் சம்பா சாகுபடி நடவு பணி தொடங்கப் பட்டு விவசாய பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. விவசாய பணிகள் கரூர் மாவட்டம், தோகை மலை அருகே உள்ள நெய்தலூர், சேப்ளாப்பட்டி, ஆர்ச்சம் பட்டி, முதலைப்பட்டி, நங்கவரம், நச்சலூர், நெய்தலூர் காலனி, குறிச்சி, சூரியனூர் போன்ற பகுதிகளில் சம்பா சாகுபடி பருவம் தொடங்கியுள்ளது. கடந்த ஆண்டு பருவ மழை குறைவால் காவிரியில் நீர்வரத்து குறைந்தது. இதனால், காவிரி ஆற்றிலிருந்தும் கரூர் கட்டளை மேட்டு வாய்க்கால் பகுதியில் இருந்தும் வரும் காவிரிநீர் பெருமளவில் நிறுத்தப்பட்டது. இதனால் இந்த வாய்க்கால் பகுதியை ஒட்டியுள்ள பகுதியில் விவசாயம் செய்ய முடியாமல் வறண்டு போனது. தற்போது இந்த ஆண்டு பருவமழை கணிசமான அளவில் பெய்து வருவ தால் காவிரி நீர்வரத்தும் அதிக மானது. இதனையொட்டி கட்டளைமேட்டு வாய்க்கால் பகுதியில் இருந்து பாசனத் திற்காக நீர் திறந்து விடப்பட் டுள்ளது. கடந்த மாதம் பயிரிடப்பட்ட நாற்றங்கால் சம்பா பயிர்களை விவசாயி கள் தங்களுடைய விவசாய

நிலங்களில் நடவு செய்ய விவசாய பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பா சாகுபடி

இந்த ஆண்டு சம்பா சாகு படியில் ஆந்திரா பொன்னி, கர்நாடகா பொன்னி, பொன் மணி போன்ற நெற்பயிர்கள் நடவு செய்யப்படுகிறது. பெரும்பாலும் இந்த ஆண்டு வருசை நடவு என்ற ஒற்றை சாகுபடி அதிக அளவில் விவசாயிகள் செய்து வரு கின்றனர். இது அதிக மகசூல் பெறவும், நாற்றங்காலை பாதுகாப்பதில் எளிதாகவும் இருக்கும் என்பதால் விவசாயி கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## மாவட்டத்தில் தொடர்மழை: சிவகங்கையில் 40 மி.மீ. மழை பதிவு விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி

சிவகங்கை மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சிவகங்கையில் அதிகபட்சமாக 40 மி.மீ. மழை பதிவானது.

தொடர் மழை

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 2நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டம் முழுவதும் உள்ள கண்மாய், ஊரணி, குளங்களில் நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நேற்று காலை 8மணி வரை மாவட்டத்தில் பதிவான மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:-

காரைக்குடி-26, மானாமதுரை-3.5, சிவகங்கை-40, திருப்புவனம்-4.2, திருப்பத்தூர்-21.2, இளையான்குடி-10, தேவகோட்டை-36.2. மாவட்டத்தில் அதிகபட்சமாக சிவகங்கையில் 40மில்லி மீட்டரும், குறைந்தபட்சமாக மானாமதுரையில் 3.5 மில்லிமீட்டரும் மழை பாதிவாகி உள்ளது. நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழையால் சிவகங்கை நகரில் காந்தி வீதி, பஸ் நிலையம், சிவன்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் வெள்ளம் போல் ஓடியது.

## விவசாயிகள் மகிழ்ச்சி

காரைக்குடியில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. மாலையில் மேகமூட்டமாக காணப்பட்டது. அதன்பின் இரவு 7மணியளவில் மின்னல், இடியுடன் சுமார் 2மணி நேரம் மழை நீடித்தது. இதனால் காரைக்குடியின் முக்கிய வீதியான செக்காலை, கல்லூரி சாலை, 2வது பீட் பகுதி, வ.உ.சி சாலை ஆகிய சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. காரைக்குடியை சுற்றி உள்ள கிராமங்களிலும் மழை பெய்ததால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். விவசாய பணிகளையும் தொடங்கி உள்ளனர். திருப்பத்தூர், தேவகோட்டை, காளையார்கோவில் பகுதியில் பலத்த மழை பெய்தது. காளையார்கோவிலில் நேற்று முன்தினம் மாலையில் இருந்தே பலத்த மழை பெய்தது. சுமார் 2மணி நேரத்திற்கும் மேல் மழை நீடித்தது. இதனால் இப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக நெய்வாசல்தென்பாதியில் 81.4 மி.மீட்டர் பதிவானது

தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக நெய்வாசல்தென்பாதியில் 81.4 மி.மீட்டர் பதிவானது.

பரவலாக மழை  தஞ்சையில் கடந்த சில நாட்களாக அக்னி நட்சத்திர காலத்தில் கொளுத்துவதை போல் வெயில் கொளுத்துகிறது. இதனால் பகல் நேரத்தில் வெளியே செல்வதற்கு மக்கள் அச்சப்படுகின்றனர். அப்படியே வெளியே சென்றாலும் குடைகளை பிடித்து கொண்டும், துணியை தலையில் போட்டுக் கொண்டும் தான் செல்கின்றனர். இதனால் வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து மக்கள் காத்து இருக்கின்றனர். இந்தநிலையில் அந்தமான் அருகே புயல் சின்னம் உருவாகியுள்ளதால் தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்தது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை முதல் மாலை வரை வெயில்

கொளுத்தியது. மாலை நேரத்திற்கு பின்பு திடீரென மழை பெய்ய தொடங்கியது. ஒரு சில இடங்களில் இடியுடன் பலத்த மழை பெய்தது. இதனால் தெருக்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. தற்போது சம்பா சாகுபடி பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தற்போது பெய்த மழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் அதேநேரத்தில் குறுவை சாகுபடி செய்த விவசாயிகள் அறுவடை பணிகளை தொடங்கியுள்ளனர். இதனால் குறுவை சாகுபடி செய்த விவசாயிகள் திடீரென பெய்த மழையினால் கலக்கம் அடைந்தனர். அதிகபட்சமாக நெய்வாசல் தென்பாதியில் 81.4 மில்லிமீட்டர் மழையும், குறைந்தபட்சமாக அய்யம்பேட்டையில் 2 மில்லிமீட்டர் மழையும் பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8 மணியுடன் கூடிய 24 மணிநேரத்தில் பதிவான மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:– அதிராம்பட்டினம்–28.4, கும்பகோணம்–7.4, பாபநாசம்–7, தஞ்சை–16.2, திருவையாறு–20.5, திருக்காட்டுப்பள்ளி–3.4, வல்லம்–14.5, கல்லணை–19.6, அய்யம்பேட்டை–2, திருவிடைமருதூர்–5.2, மஞ்சலாறு–23.4, நெய்வாசல்தென்பதி–81.4, பூதலூர்–6.4, வெட்டிக்காடு–8.6, ஒரத்தநாடு–18.5, மதுக்கூர்–18, பட்டுக்கோட்டை–11, பேராவூரணி–23.4.

தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 315.10 மில்லிமீட்டர் மழைபெய்துள்ளது. சராசரி மழைஅளவு 15 மில்லிமீட்டர் ஆகும். கடந்த ஆண்டு இதேநாளில் தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 7.20 மில்லிமீட்டர் மழை பெய்து இருந்தது. கடந்த 2012–ம் ஆண்டு சராசரியாக 263.03 மில்லிமீட்டரும், 2013–ம் ஆண்டு சராசரியாக 408.17 மில்லிமீட்டரும், இந்த ஆண்டு(2014) இதுவரை 383.81 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது.